NEW SCIENCE ACADEMY
In Front of B. M. C. Jaffna.
PAPER CLASS
பிரிவு II
ZOOLOGY
EMBROYOLOGY
By
தங்கராஜா
Tue & Thu 3.30—4.30
ஆரம்பம்:
20-03-90. 3.30 p.m



பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50



NEW SCIENCE ACADEMY
In Front of B. M. C Jaffna.
பிரிவு II
RAPID REVISION
With
PAPER DISCUSSION
Mon — Fri
BOTANY
By
செல்வநேசன்
ஆரம்பம்:-
21-03-90. 8.30 a.m



சுடர்: 5 சுக்கில ஞூ பங்குனி மீ 07 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 22 (20-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 38


# அன்னையின் நினைவாக சுழற்சி உண்ணாவிரதம்

## மட்டக்களப்பு, அம்பாறையில் அனுஷ்டானம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு நிகழ்ச்சிகள் ஈழத் தமிழர் பிரதேசம் எங்கும் நேற்று ஆரம்பமாகின.

அன்னை உண்ணா நோன்பிருந்த மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் சுழற்சி முறை உண்ணா விரதத்தில் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதி நினைவுதின நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பமாகின.

அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்த மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் நேற்று நடைபெற்ற விசேட பூசையுடன், நினைவுதின நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பூசையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதியை நினைத்து எமது சந்ததி பெருமையடையும்

## நினைவுதினக் கூட்டத்தில் கரிகாலன்

மட்டக்களப்பு, மார்ச் 20

அன்னை பூபதியின் தியாகத்தை நினைத்து எமது எதிர்கால சந்ததி பெருமை அடையும். விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் முக்கிய பங்கு வகித்தனர் என்பதை அன்னையின் வரலாறு மூலம் அவர்கள் உணருவார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் நேற்று மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற அன்னையின் நினைவு தினக் கூட்டத்தில் இவ்வாறு கூறினார்.

கூட்டத்திற்கு மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் செயலாளர் திருமதி செபமணி லோறன்ஸ் தலைமை வகித்தார்.

திரு. கரிகாலன் மேலும் கூறியதாவது:-

சாத்வீகத்தின் தந்தையாக சர்வதேச ரீதியில் அண்ணல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. மாவட்டத்திலும்

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளாகிய நேற்று முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லை நகரம், முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, மாங்குளம், துணுக்காய், வவுனிக்குளம், பாண்டியன் குளம் மற்றும் பல கிராமங்களிலும் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அனேக இடங்களில் அன்னை பூபதியின் உருவப் படங்களுக்கு குத்துவிளக்கு ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டன.

சில இடங்களில் புலிகளின் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

(ஒ-113)

# 31 தமிழ் தேசிய ராணுவத்தினர் குமுணவில் ஞாயிறன்று கைது!

கொழும்பு, மார்ச் 20

மொனறாகலை மாவட்டம் — குமுண காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலில் தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் 31 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

அரசாங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இத்தகவல் குறிப்பிடப்பட்டிருந்தது.

கைதானவர்களிடமிருந்து ஜி3 ரக துப்பாக்கிகள் இரண்டு, ஏ.கே 47 ரக இயந்திரத் துப்பாக்கிகள் நான்கு, ரீபிட்டர் கன்கள் நான்கு, தன்னியக்க பிஸ்டல்கள் மூன்று ஆகியவையும் ரவைகளுமே மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய கோஷ்டிகள் குருநாகலில் ஒரு வீட்டில் 42 ஆயிரம் ரூபாவையும், களுத்துறையில் ஒரு வீட்டில் 22 ஆயிரம் ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்பட்டது. (உ-2)

# விரைவில் மன்னார் - ராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்

## ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக சுங்கத் திணைக்களம், ரயில்வே திணைக்களம், துறைமுக சுகாதாரப் பிரிவு, குடியகல்வு குடிவரவு திணைக்களம், சமூக சேவைத் திணைக்களம் ஆகியவற்றிற்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து ரயில்வே திணைக்களம் தலைமன்னார் இறங்குதுறையைத் திருத்தி அமைத்து உள்ளதுடன், துறைமுக ரயில் நிலையத்தை அவசரமாக திருத்தும் வேலைகளையும் மேற்கொண்டுள்ளது.

சுங்கத் திணைக்கள பிரிவை இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக யாழ்ப்பாணம் சுங்க கலெக்டர் திரு. கணநாத

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கின் புனரமைப்பு மந்தம்! வெளிநாடுகள் உதவ தயக்கம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 20

''வடக்கு-கிழக்கு மாகாணப் புனரமைப்புக்கென வெளிநாடுகள், பல கோடி ரூபாவை வழங்கி இருந்தன.

ஆனால் அப்பணத்தைக் கொண்டு ஒழுங்கான, முறையான வேலைகள் நடைபெறவில்லை. வேலைகள் இன்னும் முடிவுறாமல் இருக்கின்றன.

அதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் மேலும் உதவிகளை வழங்கத் தயங்குகின்றன- இன்னும் சில நாடுகள் கை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லினால் காயமுற்றவர் மரணமானார்

யாழ்ப்பாணம் மார்ச் 20

கடந்த ஜனவரியில் தெல்லிப்பளையில் இந்தியப் படையின் ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

இறந்தவர் தெல்லிப்பளை வீமன் காமத்தைச் சேர்ந்த பி. பத்மநாதன் ஆவார்.

(உ-9)

## மூவர் காயம்

கொழும்பிலிருந்து ஐஸ்கட்டிகள் ஏற்றிகொண்டு வந்த லொறியும் முல்லைத்தீவு சென்று கொண்டிருந்த மினிவானும் மோதிக்கொண்டதில் மினிவான் புரண்டது.

இச்சமயத்தில் மினிவானில் பயணம் செய்த மூன்று பெண்கள் படுகாயங்களுக்காளாகி யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் எழுதுமட்டு வாழில் இடம் பெற்றது. (ஒ-117)

# நிரந்தரத் தீர்வு வரும்வரை ஆயுத கையளிப்பு இல்லை!

## புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை ஆயுதக் கையளிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

எம்மிடம் உள்ள ஆயுதங்கள் செம்மையான ஒரு முறையில் எமது மக்களின் பாதுகாப்பு அரணாக மாறும் நிலை விரைவில் வரும்.

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம்.

எமக்கு எமது மக்களின் பாதுகாப்பு முக்கியமானது ஆயுதங்களை எமது மக்களின் பாதுகாப்புக் கருவியாகவே நாம் பார்க்கிறோம்: வன்முறை கருவியாக அல்ல'' என்றும் அவர் சொன்னார்.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் பிராந்திய தலைமைப்பணிமனையில் வைத்து செய்தியாளர்களுக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## போராளி மரணம்

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலை புலிகள் போராளி ஒருவர் நேற்று மரணமானார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த லோறன்ஸ் என்ற அந்தப் போராளி சிறுநீரக நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## வெடிமருந்து மீட்பு

திருகோணமலைக் கடலில் வீசப்பட்டிருந்த 16 பைகள் நிரம்பிய வெடிமருந்துப் பொருள்களை திருமலைப் பொலிசார் கைப்பற்றினர்.

# ஒரிஸ்ஸா தமிழ் அகதிகள் 800 பேர் தப்பி ஓட்டம்!

## காடுகளில் 'பரா' துருப்பினர் தேடுதல்!!

புவனேஸ்வர், மார்ச் 20

ஒரிஸ்ஸா மாநிலத்தில் தஞ்சமடைந்த இலங்கை தமிழ் அகதிகளில் 800 பேர் தப்பி ஓடிவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களை கண்டுபிடிக்க 2ஆயிரத்துக்கு அதிகமான இந்திய 'பரா' இராணுவத்தினர் அருகில் காடுகளில் தேடுதல் நடத்துவதாக செய்திகள் தெரிவித்தன.

தேடுதலின்போது 15அகதிகள் ஆயுதங்களுடன் பிடிபட்டனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தகவல் தெரிவித்தன.

கோராபுட் மாவட்டத்தில் மல்காங்கிரி அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்களில் ஒரு பிரிவினரே தப்பி ஓடியவர்கள் என்றும் அவர்கள் ஈ.பி ஆர்.எல்.எவ். இயக்கத் தீவிரவதிகள் என்றும் அறிய வருகிறது.

அகதிகள் தப்பியோடிய செய்தியைக் கேள்விப்பட்டு ஒரிஸ்ஸா மாநில முதலமைச்சர் பிஜுபட்நாயக் ஆச்சரியம் தெரிவித்தார்.

(ஒ-எ)

# பாக்.வெளிநாட்டு அமைச்சர் யாகுப்கான் கொழும்பில்!

கொழும்பு, மார்ச் 20

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் யாகுப்கான் இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

ஜனாப் யாகுப்கான் இன்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவையும் வெளி நாட்டு மற்றும் பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடுவார்.

சார்க் அங்கத்துவ நாடுகளின் ஏனைய தலைவர்களைச் சந்தித்த பின்னரே ஜனாப் யாகுப்கான் கொழும்பு வந்துள்ளார்.

அடுத்த சார்க் மாநாட்டை மாலைதீவில் நடத்துவது சம்பந்தமாக அவர் இங்கு பேசுவார் என எதிர்பார்க்கப்பட்டது. (ஒ)

# 3எம். பி களுக்கு கல்தா?

அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் காணப்பட்ட மூன்று அரசு எம்பிக்களை பதவியில் இருந்து அகற்ற முடிவு செய்துள்ளேன்.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று இதனை அறிவித்தார்.

ஹனுப்பிட்டியாவில் பிங்கம மதவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனாதிபதி இந்த அறிவித்தலை விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நியமனங்களை வழங்கவோ அல்லது வேறு சலுகைகளை வழங்கும்படி கேட்டோ அரசியல்வாதிகள் அனுப்பும் கடிதங்கள் தூக்கி வீசப்படும்.

துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் அரசு ஊழியர் மற்றும் அரசியல் வாதிகள் பதவிநீக்கம் செய்யப்படுவர் என்றார். (ஒ-எ

# யாழ்-கொழும்பு ரயில்சேவை நேற்றுமுதல் நேரமாற்றம்

## இரவு மெயில் 7. 15க்கே புறப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ் - கொழும்பு ரயில் சேவையில் நேற்று முதல் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய நேரமாற்ற விவரம் வருமாறு:-

இரவு தபால் ரயில் காங்கேசன் துறையில் இருந்து மாலை 6. 30 மணிக்கு புறப்பட்டு யாழ்-ரயில் நிலையத்துக்கு 7. 12 மணிக்கு வந்து யாழ்-ரயில் நிலையத்தில் இருந்து 7. 25 மணிக்கு புறப்படும்.

கொழும்பில்இருந்து யாழ்ப்பாணம் வரும் இரவு ரயில் காலை 4. 42 மணிக்கு யாழ் ரயில் நிலையத்தையடைந்து அதிகாலை 5. 35க்கு காங்கேசன்துறையை அடையும்

### யாழ்தேவி

காங்கேசன் துறையில் இருந்து யாழ்தேவி காலை 6. 30 மணிக்குப் புறப்பட்டு

( 5 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

20- 3 - 1990
செவ்வாய்க்கிழமை பங்குனி 7
சுபநேரம்:
10-48 முதல் 12-18 வரை
இராகுகாலம்:
03-18 முதல் 4-48 வரை

# மட்டக்களப்பு நகரில் புலிகள்—பொலீஸார் கூட்டாக வீதிக் கடமை!

## விமானப்படை தெருவில் பிடிவாதம்

மட்டக்களப்பு, மார்ச் 20

கடந்த வெள்ளிக்கிழமை முதல் மட்டக்களப்பில் ஸ்ரீ லங்காப் பொலீஸாரும், விடுதலைப்புலிகளும் கூட்டாக வீதிப்போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலீஸாரின் வீதி ஒழுங்கு முறை சம்பந்தப்பட்ட ''கட்டளை'' களை பொதுமக்கள் அசட்டை செய்து வந்ததை அடுத்தே விடுதலைப்புலிகளும் இந்த வீதி ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர் எனத் தெரிய வந்தது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்பு வீதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை செய்யப்பட்ட ஓரிடத்தில் ஸ்ரீ லங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருந்தன

அதனைக் கண்ட பொலீஸார் அந்தவாகனங்களை உடனடியாக அவ்விடத்தில்

(5ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அரசாங்க எம். பிமார் எலலாம் இப்ப நானோ, நீயோ எண்டு முழுசிக்கொண்டு இருப்பினம்...! பாவங்கள்....!!


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். Hyline, வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், .Hisev பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2881)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத் கறுப்பு வரிசேவல் (Lohmann) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 21-3-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய். இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) ( 12055)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை மணியகாரன் (கயித்தார்) சந்திக்குஅண்மையில் நிலப்பரப்பு 5½ கொண்ட வீடு கட்டக் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் திரு. அம்பலவாணபிள்ளை இலட்சுமிகாந்தன் தும்பளை பருத்தித்துறை. (C 4044)

### For Sale

Bajaj Scooter for sale one owner in good condition 35, Bankshall Street, Jaffna. (2883)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### மணமகன் தேவை

சைவ வேளாள குடும்பத்தை சேர்ந்த 30 வயது தனியார் நிறுவனத்தில் Accountant வேலை செய்யும் பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். No. 648, C/o உதயன். (2880)

### ஆசிரியர் தேவை

ஆண்டு 7 படிக்கும் மாணவனுக்கு கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்கள் போதிப்பதற்குG.C.E (A/L) படித்த ஆசிரியர் தேவை. நல்லூர் கோவில் வீதியில் உள்ள இல்லத்திற்கு வந்து படிப்பிக்கக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும் தொடர்பு: No. 649, C/o உதயன். (2882)

### தவறிவிட்டது

17-03-90 யாழ்ப்பாணம் சாவகச்சேரி மினிபஸ்ஸில் எனது 676790101V இலக்கமுடைய அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது 241, 2ஆம் குறுக்குத் தெரு, கச்சாய் வீதி. சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். ((2879

## A/L PHYSICS

ஆசிரியர்:

**R. சத்தியசீலன்**

B. M. C. முன் லேன், யாழ்ப்பாணம்.

A/L 90

DAY CLASSES

Monday to Friday

8.30 a.m. ஒலியியல்

9 30a.m. ஒட்டமின்னியல்

ஆரம்பம்: 19 - 03 - 90

திங்கள் காலை 8.30 மணி

[சி-4112]

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



கந்தையா சேதுப்பிள்ளை தம்பதிகள்

பெற்றெடுத்த

**பார்த்திபன்**

என்னும் மல்லிகை மொட்டு

அன்னையின் மடியில் மலர்வு: 08-12-1969

இறைவனின் பாதத்தில் அர்ப்பணம்: 31-03-1989

திதி: 20 — 03 — 1990

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் இணையடிக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

உள்ளத்திற்குகந்த வள்ளல் முருகன் பாதத்தில் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டி நிற்கும்.

பெற்றோர், சகோதரிகள், மைத்துனர்கள்.

7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. [சி-3429]

### வகுப்புக்கள்

Radio T. V. Air-Conditioning Refregeration' வயரிங், வெல்டிங், பெயிண்டிங், பிளம்பிங், மோட்டர் மெக்கானிசம் Typing, Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை, அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (12064)

## நியமனம்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் லிகிதராகக் கடமையாற்றும் திரு. நி. சிவானந்தன் அடுத்த மாதம் 2 ஆம் திகதியில் இருந்து நல்லூர் பிரதேச சபைக்கு கணக்குப் பதிவாளராக நியமனம் பெற்றுச் செல்கின்றார். (க)

## பயிற்சி

நெடுந்தீவு மார்ச் 20

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் ஆதரவில் நடைபெறும் சிறுவர் பராமரிப்பு பயிற்சி நிலையத்தில் மீண்டும் தட்டச்சு சுருக்கெழுத்துக்களுக்கான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-111)

## பல்கலைக்கழகத்தில் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்கள் மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்காக பண்டாரகமவுக்கு செல்வது சம்பந்தமான ஒழுங்குகள் பற்றி ஆராய கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 22 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்று நடைபெற இருக்கின்றது. (ஒ-3)

## இளைஞர் உருவாக்கல் இயக்கம் நடத்திய கருத்தரங்கு

குருநகர், மார்ச் 4

"ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவால் விடுதலையை விரும்பின் கிறிஸ்து போல ஒவ்வொருநாள் சிலுவையையும் சுமக்க வேண்டும்."

யாழ் - புனித மரியன்னை பேராலய "இளைஞர் உருவாக்கல் இயக்கம்" சமீபத்தில் ஆன்மீக உளவியல் கருத்தரங்கை இரு தினங்கள் நடாத்தியது.

அருட்தந்தை இராயப்பு அடிகள் "இறையியல் விடுதலை" எனும் தலைப்பில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்தரங்குக்கு பங்குத்தந்தை வண பிதா எஸ். எச். எச். ஜெபநேசன் அடிகளார் தலைமை வகித்தார்.

"உளவியல் ஓர் அறிமுகம்" "பயன்பாடு" விடுதலை இறையியல், "நீ கிறிஸ்தவனா" தலைமைத்துவமும் உறவுகளும் "இளமைப் பருவமும் பாலியல் பிரச்சினைகளும்" எனும் தலைப்புகளில் அருட்தந்தையார் கருத்துரை வழங்கினார்.

கருத்தரங்கில் வண பிதாக்கள் ஞா. எட்மன்மைக்கல், கிருபானந்தன் அன்ரனிபாலா, என். டேமியன், சந்திரகாந்தன், இராயப்பு அடிகளார் யாழ்- பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ரி. மல்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ- 51

## அரச நியமன விகிதாசார விபரம்

தேசிய மட்டத்திலான அரசு நியமனங்கள் தேசிய இனவிகிதாசாரத்திலும்—

மாகாண ரீதியிலான நியமனங்கள் மாகாண இனவிகிதாசாரத்திலும் —

மாவட்ட ரீதியிலான நியமனங்கள் மாவட்ட இனவிகிதாசாரத்திலும்—

நடைபெற வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

மாகாணப் பொதுச் சேவைக்கான நியமனங்களை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவே செய்யவேண்டும் என முடிவாகியுள்ளது.

உ

"ஓம் நமசிவாய சிவாய நம ஓம்"

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களரமான சுக்கில வருடம் பங்குனி மாதம் 8ஆம் நாள்(21-03-90) புதன் கிழமை காலை 10.12 தொடக்கம் 11.14 வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| எங்கள் புதல்வன் திருநிறைச்செல்வன் | எங்கள் புதல்வி திருநிறைச்செல்வி |
|---|---|
| **விஜயேஸ்வரனுக்கும்** | **உமையாளுக்கும்** |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்து அண்ணாமலை சிதம்பர நடராஜர் கோயில் (இந்தியா) சன்னிதான மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

★ இரவு விருந்து- 31-03-1990 பிரதிப மண்டபம் குணசிங்கபுர - புறக்கோட்டை

| திரு. திருமதி ச. விஜயரெட்ணம் | திரு. திருமதி மா. விஜயரட்ணம் |
|---|---|
| 3, லொறொங் எஸ். எஸ் / எ, | 1, அல்பிரட் ஹவுஸ் வீதி, |
| பீற்றலிங், ஜெயா 47300 | கொழும்பு - 3. |
| மலேசியா. | [2922] |

## நகரசபை, வவுனியா

நகரமத்தியில் அமைந்துள்ள சபைக்குரியகாணித்துண்டுகளுக்கும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கும் குத்தகை அடிப்படையில்

## வர்த்தகம் செய்வதற்கான
# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் காணித்துண்டுகளுக்கும், அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கும் நீண்டகால குத்தகை அடிப்படையில் வர்த்தகம் செய்வதற்கு உரிமை கோரி கேள்வி சமர்ப்பிக்க விரும்புவோர் கேள்விகள், 28 - 03 - 1990ந் திகதி பி. ப. 2 00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் அதே தினம் பி.ப. 2.15ற்கு கேள்விச்சபை முன் திறக்கப்படும்.

27-03-1990ந் திகதி பி. ப. 3 00 மணி வரை கீழ்க்குறிப்பிட்டதற்கிணங்கிய கொடுப்பனவுகளைச் செலுத்தி உரிய கேள்விப் படிவங்களை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் இரு பிரதிகளில் அரக்கு முத்திரையிடப்பட்டு நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமோ கடித உறையின் இடதுபக்க மூலையில் வர்த்தக உரிமைக்கான கேள்விகள்" என்ற குறிப்புடன் செயலாளர், நகரசபை, வவுனியா என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

ஏனைய விபரங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே நகரசபையினால் குத்தகை உரிமை பெற்று வர்த்தகம் செய்பவர்களுக்கு எக்காரணம் கொண்டும் பிறிதொரு குத்தகை உரிமைக்கான கேள்விகளுக்குரிய கேள்விப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

கேள்வி நிபந்தனைகளில் மாற்றம் செய்யவோ, கிடைக்கப்பெற்ற கேள்விக்காரர் சம்பந்தமாக தீர்மானிக்கவோ, கேள்விகளை நிராகரிக்கவோ சபைக்கு பூரண உரிமையுண்டு.

| தொ. | | அமைந்துள்ள இடவிபரம் | மீளளிக்கப் படாதபடிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | கேள்விக் காரர் மிகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | (1) | சந்தைசுற்றுவட்ட வீதி | 100/- | 500/- | 60,000/- |
| 2 | (2) | சந்தைசுற்றுவட்ட வீதி | 100/- | 500/- | 100,000/- |
| 3. | (1) | முகாந்திரம் தர்மலிங்கம் வீதி | 100/- | 500/- | 160,000/- |
| 4. | (1) | கொறவப் பொத்தானை வீதி | 100/- | 500/- | 350,000/- |
| 5. | (2) | கொறவப் பொத்தானை வீதி | 100/- | 500/- | 350,000/- |
| 6. | (3) | கொறவப் பொத்தானை வீதி | 100/- | 500/- | 900.000/- |
| 7. | (1) | கடை வீதி | 100/- | 500/- | 300 000/- |

இராசா தணிகாசலம்
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. 15 - 03 - 90 [சி-4065]

# WANTED

An Establishment in Jaffna Town requires the Services of an Accounts Clerk with experience in Book - keeping Applications from either six with full Bio Data will be accepted till 24-03-1990

The Advertiser,
650, C/O UTHAYAN.
(C/4115)

To Help you
**Begin Build up & Enrich your English**

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
க.பொ.த. உ/த தொழில்நுட்ப, பல்கலைக்கழக, பட்டதாரி மாணவர்களுக்குரிய;

## An Integrated English Course
(ADVANCED)

6 மாத கால தீவிரப் பயிற்சி

ஆரம்பம்: 25 - 03 - 1990

- ★ English Speeh Practice (Spoken)
- ★ Grammar & Usage
- ★ Vocabulary Enrichment
- ★ Reading with Understanding Prose & Verse
- ★ Practice in Writing

இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
கட்டணம் ரூபா 450. 00 [முழுப் பயிற்சிக்கும்]
வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில்

விபரங்களுக்கு:

## ASTAN INSTITUTE

166/1. Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
(சி3473)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
06 - 03 - 1970

★●★

இறைவன் அடியில்:
20 - 12 - 1989

அமரர்

**அருளானந்தம் கண்ணதாசன்**
(கண்ணன்)

(ராணி ஜுவலறி உரிமையாளர், பண்டத்தரிப்பு)

மரணம் எல்லோருக்கும் சகஜம்
ஆனால் உமக்கேன் நிகழ்ந்தது.
இந்த அவலம் காற்றிற்கு ஒரு
கண் இருந்தால் அது
நடந்த கதை சொல்லியிருக்கும்
கண் இரண்டும் கவலையால்
நீர் சுரக்க கணக்கற்றோர் இங்குண்டு!
அத்தனை பேரும் வாயுள்ள ஊமைகள்தான்
உன் நெஞ்சு வேகையிலே
எம் நெஞ்சும் வேகுது!

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அம்மா, ஐயா, அண்ணா, தம்பி, தங்கை,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

மகாஜனாக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை. (4056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
பண்டறியேன் கூற்றென்பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.

**பொருள்:**
எமன் என்று சொல்லப்படுவதை முன்பு அறியேன்; இப்பொழுது கண்டறிந்தேன்; அது பெண் தன்மையுடன்போர் செய்யும் பெரிய கண்களை உடையது.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
20-03-1990 த. பெ. இலக்கம் : 25


## பதவிகளும் பங்களிப்பும்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) கடந்த வார இறுதியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைத்துத் தெரிவித்த கருத்து மக்கள் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒன்றாகும்.

தேர்தல், நாடாளுமன்றம், பதவிகள் எல்லாம் சிறிய விடயங்கள். மக்களின் பங்களிப்புடன் அரசியல் திட்டங்களை மேற்கொண்டு எமது பாரம்பரிய உரிமைகளை, இழந்த உரிமைகளை மீட்க வேண்டும். அந்த வகையிலேயே எமது வேலைத் திட்டங்கள் அமைந்துள்ளன; அமையும். அவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டே நாம் சனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளோம் — என்று அவர் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக கெரில்லா அமைப்பாக, இரகசியமாக இயங்கிய நாம் இன்று தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் படையாக உங்கள் முன் வந்துள்ளோம். அது மேலும் பலமடைவதற்கு மக்கள் தமது முழுமையான பங்களிப்பையும் வழங்க வேண்டும்— எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதையே தமது தலையாய இலட்சியமாகக் கொண்டவர்கள். அந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தமது உயிரை எந்தக் கணமும் துறக்கச் சித்தமாகக் கொண்டு போராடத் துணிந்தவர்கள். அந்த இலட்சிய உணர்வும், தியாக சிந்தையுமே அவர்களுக்கு மக்கள் ஆதரவு பெருக அடித்தளங்களாக அமைந்தன; அமைகின்றன.

ஒரு மனிதனின் வாழ்வில் ஆகப் பெறுமதி மிக்கது அவனது உயிர். அந்த உயிரையே துச்சமென மதித்து இலட்சியத்துக்காகப் போராடும் மன உணர்வு பெற்றவர்களுக்கு பதவி, அந்தஸ்து, ஆதிக்கம் என்பன பெரிதாகத் தெரியமாட்டா.

ஆன்மீக வாழ்வில் ஈடுபாடு கொண்டு, உலகியல் வாழ்வைத் துறக்க முழுமனம் கொண்டவர்கள், அதன் சுகபோகங்களைத் துச்சமென எண்ணி ஆண்டவன் அடியையே சிந்தையில் கொள்வர். அது போலவே விடுதலை, உரிமை என்ற உன்மையான இலட்சிய உணர்வு பொங்கும் போராளியின் நிலையும். பதவி அந்தஸ்து, என்பன அவர்களுக்குத் துச்சமாகத் தெரிவது இயல்பு.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டரை வருட காலமாக அவர்கள் உறுதி கொண்ட நெஞ்சினராக, பல உயிர்த்தியாகங்களைச் செய்து தமது இலட்சியத்துக்காக போராடியதை உலகமே வியந்து நோக்குகிறது. அவர்கள் தமதுஇராணுவ பலத்தைத் தளமாக்கி அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்திருப்பது நல்ல விளைவுகளைத் தரும் என்று உலக நடப்புகளில் ஆழ்ந்த அனுபவம் உள்ளோர் கருதுகின்றனர்.

ஆனால் எமது மக்களில் பலரும், கடந்த நாற்பது வருடங்களாகத் தேர்தல், நாடாளுமன்றம், பதவிகள் என்று இருந்த அரசியல் பாரம்பரியத்தையே விடுதலைப் புலிகளும் தொடரப் போகிறார்கள்; தொடர வேண்டும் என நினைக்கிறார்கள். அவர்களுக்குத் திரு. மாத்தயாவின் விளக்க உரை நல்லதொரு தெளிவுரையாக அமைந்துள்ளது.

அவர் கூறியது போல, கெரில்லா இயக்கமாக இருந்த விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் குதித்துள்ளார்கள். மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய அரசியல் திட்டங்களின் அடிப்படையிலேயே தமது செயற்பாடு அமையும் என அவர் கூறியிருப்பது மேலும் வரவேற்கத்தக்கது. அந்தத் திட்டங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் அவற்றில் பங்காளிகளாக வாய்ப்பு உண்டாகும்.

விடுதலைப் புலிகள் வெறும் இராணுவ இயக்கத்தினர், அரசியல் திட்டங்கள், பின்னணிகள் இல்லாதவர்கள் என்று குறை கூறுவோரின் வாயை அடைக்கும் விதத்தில் அவர்கள் தமது எதிர்காலத்திட்டங்களை மக்கள் முன் வைக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அவர்களுக்கு உள்ள மக்கள் ஆதரவு மேலும் பெருகும் என்பதில் ஐயமில்லை,

தமது வாழ்வையே அர்ப்பணித்து, காடுகளில் சொல்லொண்ணாக் கஷ்டங்களை அனுபவித்து மக்களின் உரிமைகளுக்காகப் போராடியவர்கள் எமது போராளிகள். அவர்கள் பதவிகள், அந்தஸ்துகளை பெரிதாகப் பார்க்க மாட்டார்கள். ஆனால் அவர்களின் தியாகத்தைப் பசளையாக்கி, தாம் தளிர்விடச் சில சந்தர்ப்ப வாதிகள், சுயநல மன்னர்கள் காத்திருக்கக்கூடும். எல்லாவிடயங்களிலும் மிகக் கண்காணிப்பாக இருப்பதில் பெயர்பெற்ற விடுதலைப் புலிகள் இது விடயத்திலும் கவனமாக இருப்பர் என்றே எதிர்பார்க்கலாம். இல்லையேல், அவர்கள் மக்கள் அபிமானத்தையும், ஆதரவையும் இழந்துவிட ஏதுவாகிவிடும்.

உரிமைப் போராட்டங்கள் மக்கள் பங்களிப்பு இல்லாமல் வெற்றி அடைவது சாத்தியமில்லை. எனவே எமது மக்கள், உரிமைப் போராட்டம் தொடர்வதற்குத் தமது பங்களிப்பைச் செலுத்த மனச்சித்தம் கொள்ளவேண்டும், அது மற்றவர்கள் திணித்து வருவதல்ல. மக்கள்தாமே மனதாரஉணர்ந்து உரிய பங்களிப்பை—, ஒவ்வொருவராலும் இயன்ற பங்களிப்பை— நல்க வேண்டும்,

## கைவிடப்பட்ட குழந்தை

குருநகர், மார்ச் 20

பிறந்து ஒரு வாரத்திற்கு உட்பட்ட ஆண் குளந்தை ஒன்று யாழ்- கடற்கரை வீதி திருச் சிலுவை சுகநல நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

'பிளாஸ்ரிக்' கூடை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குழந்தையுடன் சிறிய என்வலப்பில் நூறு ரூபாவும், சோப்பவுடர், ஓடிக்கோலோன் என்பனவும் வைக்கப்பட்டிருந்தனவாம்.

குழந்தை இப்பொழுது திருச்சிலுவைச் சகோதரிகளின் பராமரிப்பில் அங்கேயே உள்ளது. (ஒ-5)

# அரசகூட்டுத்தாபன ஊழியருக்கு விரைவில் நஷ்டஈடு கிடைக்கும்

## உயிர்ச் சேதத்துக்கு 5 வருடச்சம்பளம் உடைமைச் சேதத்துக்கு ரூ.1½ லட்சம் வரை

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த கால அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான நஷ்டஈடுகளை புனர் வாழ்வு அமைச்சு வழங்க இருக்கிறது.

கடந்த இருவாரங்களுக்கு முன் இந்த நஷ்டஈடு வழங்கும் வேலைகள் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அசம்பாவித சம்பவங்களின்போது மரணமான அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் குடும்பங்களுக்கு ஐந்து வருடச் சம்பளம் வழங்கப்படும்.

வீடுகள் சேதமாக்கப்பட்டு உடமைகள் (நகைகள் தவிர) களவாடப்பட்டால், ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

த்தந்இ திட்டத்தின் கீழ் விரைவில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

அரசாங்க நிர்வா மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்று நிருபங்கள் 49/89, 59/89 மூலம் இது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே. (க-3)

### நினைவில் இன்று

20-03-1990

● சேர் ஐசக் நியூட்டன் நினைவு தினம்

யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தில்

## முகாமைத்துவ பயிற்சிக்கு நியமனமாகிய பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்- உள்ளூராட்சி திணைக்களத்தில் முகாமைத்துவ பயிற்சிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஐந்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் பயிற்சியின் பின் சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பதவிக்கு நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

யாழ்- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா இவ்வாறு தெரிவித்தார்.

தற்சமயம் இந்த ஐந்துபட்டதாரிகளுக்கும் இருமாதப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

நியமனம் பெற்றோர் வருமாறு:

திருமதி. ராணி இரத்தினதேவி சின்னத்தம்பி, செல்வி. இரத்தினமணி நடராசா, திருமதி வசந்தி ஜெயராசா, திருமதி மகேந்திரமூர்த்தி தேவாயினி, செல்வி. ஜெய மனோகரன் ஆகியோர். (க-3)

## வயோதிபர் சடலம்

பச்சிலைப்பள்ளி, மார்ச் 20

பளை வைத்திய சாலைக்கு அருகில்தென்னந்தோட்டத்தில் இனந்தெரியாத அறுபது வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

இவரது சடலத்திற்கு அருகில் சாராயப் போத்தலும் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மடம்வீதி முகவரியிடப்பட்ட கடிதத்துண்டும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# ஜே. ஆர். அன்று சொன்னதை நாம் இன்று சொல்கிறோம்

## நினைவுத் தூபி திறப்பு விழாவில் ஆஞ்சநேயர்

குருநகர், மார்ச் 20

1987, ஆம் ஆண்டுக் காலத்தில் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா சொன்னார் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று. அதையே இன்றைய அரசுக்கு நாம் தமிழீழ விடுதலைப்புலிகள் சொல்கிறோம் போர்என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்.

யாழ்.பிரதானவீதி-ஆறாம் குறுக்கு வீதிச்சந்தியில் திறந்து வைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் போராளி கேதீஸ் விசயானந்தன் நினைவுத் தூபி வைபவத்தில் கலந்து சிறப்புரை நிகழ்த்திய வலிகாமம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பளார் திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆஞ்சநேயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது ''எமது மக்கள் அழிக்கப்படுகிறர்கள். சுதந்திரம் பறிக்கப்படுகிறது. என்ற உணர்வுடன் போராடிக் கொண்டிருக்கும் நாம் தமிழீழத்தை நிறுவவும் சுதந்திரத்தைப் பேணவும் திடசங்கற்பம் எடுத்துள்ளோம்'' என்றார்.

போராளி கேதீஸின் தந்தை ஹென்றி பெரியதம்பி தூபிக்கு விளக்கேற்றி திருவுருவப் படத்தையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

வைபவ ஆரம்பத்தில் போராளி நினைவாக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புலவர் தலைமையுரையில் ''கடந்த கால துன்பநிலைமைகளைக் கடந்த காலமாகவே கருதுவோம். இனி வருகின்றகாலம் பொன்னான காலம். போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தமது முன்னேற்றத்துக்காகப் போராடியவர்கள் அல்லர் தமிழ் மக்களின் மறுமலர்ச்சிக்காகப் போராடியவர்கள் என்று கூறினார்.

மரணித்த மற்றொரு விடுதலைப் புலிகள் போராளி கப்டன் லிங்கநாதனின் தந்தை திரு. ஆ. சிங்காரவேல் பேசுகையில் உலகத்தின் நான்காவது பெரிய இராணுவத்துடன் போராடிய பெருமை தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு உண்டு என்றார்.

செல்விகள் பெலிசிற்றோஸ், அனுஷா, லூர்த்து ஆகியோர் கவிதாஞ்சலி செய்தனர். பல்கலைக்கழக மாணவன் செல்வன் செல்வம் உட்பட பலர் உரையாற்றினர். (இ-51)

## வாசகர் திருமுகம்

### பண்டிகை முற்பணம்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கான சம்பள முற்பணமாக 1500/- ரூபா நிர்ந்தர தற்காலிக ஊழியர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

ஆனால் வசதிக் கட்டணத்தில் இருந்து மாதாந்தவேதனமாக ரூபா 450/- பெறும் ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணமாக 1500/ ரூபா கொடுக்கப்படுமா?

அரச ஊழியர்களுக்கு 200/- ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்ட போது வசதிக்கட்டணத்தில் இருந்து குறைந்த வேதனம் பெறும் ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

-தி. நடராசா
யாழ்ப்பாணம்.

### மேலதிக படகு சேவை

நெடுந்தீவு மார்ச் 20

கடந்த ஒரு மாதமாக நெடுந்தீவு பிரதேசசபையில் நடத்தப்பட்டு வந்த நெடுந்தீவு குறிகட்டுவான் மேலதிக படகுச் சேவை கடந்த 16ம் திகதி முதல் நிறுத்தப்பட்டது. போதிய வருமானம் இல்லாத நிலையில் தொடர்ந்தும் மேற்படி சேவையை நடத்த முடியாத நிலையிலேயே பிரதேசசபை இதனை நிறுத்தியதாகத் தெரிகின்றது

தினசரி ஒருசேவையேஇடம் பெறுகிறது குறிப்பிடத்தக்கது. (க-111)

## ஜீ. சி. ஈ. பரீட்சார்த்திகளுக்கு நேரசூசி, அனுமதி கார்ட்

### தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன

கொழும்பு, மார்ச் 20

ஜீ. சி. ஈ. சாதாரண பத்திரப் பரீட்சார்த்திகளுக்கான நேரசூசி, அனுமதி கார்ட்டுகள் ஆகியன பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த சனிக்கிழமை தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

இம் மாதம் 30 ஆம் திகதி இப் பரீட்சை ஆரம்பமாகிறது ஐந்தரை லட்சத்துக்கு அதிகமான பரீட்சார்த்திகள் இப் பரீட்சையை எடுக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்குத் தேசிய அடையாளக் கார்ட் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அடையாளங் கண்டு கொள்வதற்கு பரீட்சார்த்தி ஒருவர், தான் கையொப்பமிட்ட இரண்டு புகைப் படங்களை சமர்ப்பிக்க பரீட்சைத் திணைக்களம் அனுமதித்து உள்ளது. (ஒ-எ)

# சண்டிலிப்பாய்- சங்கானையில் பதவி ஏற்ற கிராமசேவையாளர்

யாழ்ப்பாணம் மார்ச் 20

யாழ் மாவட்டத்தில் புதிய கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராமசேவையாளர் பதவிகளை ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவையாளரின் விவரம் ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.

இன்றைய உதயனில் சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பதவி ஏற்றவர்களின் விவரம் வெளிவருகிறது.

### சண்டிலிப்பாய் உ.அ.அ. பிரிவு

சுதுமலை வடக்கு (J.129)- எஸ். கணேஸ், சுதுமலை தெற்கு (J. 130)- வி விவேகானந்தன், சிவகட்டு (J.131)- இன்னும் நியமிக்கப்படவில்லை.

உயரப்புலம் (J.132)- எம். பி. சிவபாதசுந்தரம், ஆனைக்கோட்டை (J. 133)- வி. சந்திரராஜா, நவாலி வடக்கு [J.134]- இன்னும் நியமிக்கப்படவில்லை, நவாலி கிழக்கு (J.135)- என். பற்குணராஜா மானிப்பாய் கிழக்கு [J.136]- என். மகிழ்ராஜா, மானிப்பாய் வடக்கு [J 137]- இன்னும் நியமிக்கப்படவில்லை,

மானிப்பாய்கிழக்கு (J.138) எஸ். சிவகுமார், மானிப்பாய் தெற்கு (J. 139)- ஆர். இராஜயோகம், மானிப்பாய் மேற்கு (J.140)- இன்னும் நியமிக்கப்படவில்லை.

சண்டிலிப்பாய் வடக்கு (J. 141)- இன்னும் நியமிக்கப்படவில்லை, சண்டிலிப்பாய் மத்தி (J 142)- எஸ். சிவதாசன், சண்டிலிப்பாய் மேற்கு (J.143)- எஸ். கந்தசாமி, மாசியப்பிட்டி (J.144) திருமதி எஸ். சண்முகநாதன்

வடலியடைப்பு (J.145)- என். நித்தியானந்தன், பண்டத்தரிப்பு, (J.146)- ஆர். துரைராஜா, பிரம்பத்தை [J.147] என். நாகராஜா, சில்லாலை வடக்கு [J.148]- எஸ், நாராயணன், சில்லாலை தெற்கு [J.149)-பீ. கப்றியேல் பிள்ளை,

மாதகல் கிழக்கு [J 150)- கே. சந்திரசேகரம், மாதகல் தெற்கு (J.151)- எம். பவிலுப்பிள்ளை, மாதகல் மேற்கு [J.152)- எஸ். சுந்தரமூர்த்தி பெரியவிளான், (J.153)- பீ. யோகராஜா, மாரியன்கூடல் (J 154) - இன்னும் நியமிக்கப்படவில்லை, இளவாலை (J.155) - ஆர். நித்தியானந்தம், முல்லாணை (J.156)-

### சங்கானை உ. அ. பிரிவு

இன்னும் நியமிக்கபடவில்லை

வட்டு கிழக்கு (J157-)- விஜயவேல், வட்டு - வடக்கு (J158)-ரீ. சிவபாக்கியநாதன், சங்கரத்தை (J.159) - என் தர்மலிங்கம், அராலி மேற்கு (J.160)- [illegible] ஜெகதீஸ்வரன்அராலி தெற்கு (J.162) - பி. தர்மகுலசேகரம், அராலி கிழக்கு(J163) ஜே. கதிர்காமநாதன், அராலி லடக்கு (J164) - கே. சிறீ முருகவேல், வட்டு தெற்கு (J165)- எஸ். நாகரத்தினம், வட்டு. தென் மேல் வடக்கு (J.166) - சர்வானந்தன், வட்டு மேற்கு (J167)- கே. சிறீஹரன், தொல்புரம் கிழக்கு (J 168) - கே. தர்மலிங்கம், தொல்புரம் மேற்கு வடக்கு (J169) - ஆர் சிறீ ரஞ்சன், பொன்னாலை.

பொன்னாலை (J.17) -வி. இரத்தினம், மூளாய் (J.171) -எஸ். கே. பாலசிங்கம், சுழிபுரம் மேற்கு (J. 172)- என். குமரகுருநாதன், சுழிபுரம் மத்தி (J. 173)-

எம். தர்மதாசன் சுழிபுரம் [J.174]- ரீ. கதிர்காமநாதன் பண்ணாகம் [J.175]- திருமதி ஆர். குலவீரசிங்கம், பன்னிப்புலம், (J.176)- என். அழகரத்தினம், சித்தங்கேணி (J.177)- எஸ். வைத்தியநாதன் சங்கானைகிழக்கு(J.178) என். சந்திரசேகரம்பிள்ளை, சங்கானை மேற்கு (J179)- இன்னும் நியமிக்கப்படவில்லை,

சங்கானை தெற்கு (J, 180), செல்வி எஸ். சண்முகம், சங்கானை மத்தி (J. 181), ரீ. எஸ். நவரத்தினம்.

(தொடரும்)

(இ-ச)

## கண்டதும் கேட்டதும்

தமது படைப்புகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாகவேண்டும் என்பது இலக்கிய கர்த்தாக்களின் இயற்கையான ஆசையாகும். பின்னர் இவற்றில் வெளிவந்தவற்றை நாலுநவாக்குவது அவர்களின் இன்னொரு இலட்சியமாகும்.

எழுதியவற்றை அச்சு வாகனம் ஏற்றுவதில் கடந்த காலத்தில் பல சிரமங்கள் இருந்தன.

இதுபற்றி சுவையானதோர் நிகழ்ச்சியை கவிஞர் முருகையன் சார்ள்ஸின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் எடுத்துக் கூறினார்.

அந்தக் காலத்தில் அதாவது 40 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 50 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் இளம் மாணவனாக இருந்த முருகையன் கண்ணுக்கு அகப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்துக்கும் கவிதைகள், கட்டுரைகள் அனுப்பிவிட்டு அவற்றை அச்சில் பார்க்க ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்.

அதிகமாக அவை பிரசுரமாகமாட்டா.

அப்பொழுது இளைஞர் முருகையன் இந்தக் கவிதைகள், கட்டுரைகளை இந்தியாவில் இருந்த பிரசித்திபெற்ற எழுத்தாளர்களான ரா. ஸ்ரீ. தேசிகன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலியோருக்கு அனுப்பிவைப்பார்.

அவர்கள், (குறிப்பாக ரா. ஸ்ரீ. தேசிகன்) கவிதைகளைப் பாராட்டி எழுதித் திருப்பி அனுப்பிவிடுவார்கள்.

முருகையன் என்ன செய்வார் என்றால் அவர்களின் குறிப்புரைகளுடன்கூடிய கவிதைகளை பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு அனுப்பிவைப்பார்.

அந்தக்கவிதைகள் தாமதமின்றிப் பிரசுரமாகும்! இதுவும் ஒரு பிரசுர உத்திதான்!

-செய்திலோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரவேலில் புதிய அரசு அமைக்க தொழிற்கட்சி முயற்சி

ஜெருசலம் மார்ச் 19 இஸ்ரவேலிய அரசு கவிழ்ந்தது.

கூட்டு அமைச்சரவையில் இருந்து தொழிற்கட்சி வெளியேறியதைத் தொடர்ந்து, லிக்குயிட் கட்சி அமைச்சரவை, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றில் தோற்றது.

மதசார்பு சிறுபான்மைக் கட்சிகளும் தொழிற்கட்சியும் அரசுக்கு எதிராக வாக்களித்தன.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ஷாமிர் தனது அமைச்சரவையின் ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

புதிய அமைச்சரவையை அமைக்கும்படி தொழிற்கட்சியை ஜனாதிபதி அழைத்திருக்கிறார்.

தன்னால் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியும் என்று தொழிற்கட்சித் தலைவர் ஷிமொன் பெறஸ் கூறியிருக்கிறார்.

கடந்த 13 ஆண்டுகளில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு ஒன்று தொழிற்கட்சிக்குக் கிடைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீனியருடன் பேச்சுக்களை நடத்தி மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சம்பந்தமான அமெரிக்க யோசனை தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கூட்டு அமைச்சரவையில் இருந்து தொழிற்கட்சி வெளியேறியது. அதனைத் தொடர்ந்தே பிரதமர் ஷாமிர் தலைமையிலான அரசு கவிழ்ந்தது

# ஐக்கிய ஜேர்மனியின் அதிபர் பதவி ஹெல்மட் கோலுக்கு கிடைக்கலாம்?

## கிழக்கு ஜேர்மன் தேர்தல் முடிவினால் ஏற்பட்டுள்ள புதிய திருப்பம்!

பொன், மார்ச் 19 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கிழக்கு ஜேர்மனியில் நேற்று நடந்த முதலாவது சுதந்திரப் பொதுத் தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி 40 சதவித வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது.

சமூக ஜனநாயகக் கட்சிக்கு 20 சதவித வாக்குகளும் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 16 சதவித வாக்குகளும் கிடைத்தன.

400 ஆசனங்களைக் கொண்ட கிழக்கு ஜேர்மன் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை பெற கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு எட்டு ஆசனங்களே குறைவாக உள்ளன.

கிழக்கு ஜேர்மனியில் அரசு அமைக்கவிருக்கும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக் கூட்டணியின் போஷகராக மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் இருக்கிறார்.

மேற்கு ஜேர்மனியில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியே ஆட்சி நடத்தி வருகிறது.

இரண்டு ஜேர்மனிகளும் விரைவில் இணைக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தையே கிழக்கு ஜேர்மன் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுவதாக அதிபர் ஹெல்மட் கோல் தெரிவித்தார்.

இனி கிழக்கு ஜேர்மன் மக்கள் தங்கள் நாட்டில் இருந்து வெளியேற வேண்டியதில்லை. சொந்த நாட்டைக் கட்டி எழுப்பும் பணியில் அவர்கள் ஈடுபட வேண்டும்— இப்படி மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

இரண்டு ஜேர்மனிகளையும் இணைக்கும் பணியைப் பூரணப்படுத்துவதே, கிழக்கு ஜேர்மனியில் தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கடமையாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு ஜேர்மனிகளும் இணைந்து உருவாகும் ஐக்கிய ஜேர்மனியின் முதலாவது அதிபராக மேற்கு ஜேர்மனியின் தற்போதைய அதிபர் ஹெல்மட் கோல் தெரிவு செய்யப்படுவார் என்பது உறுதியாகி விட்டது.

# மலேசியா செல்வோருக்கு பிரயாணக் கட்டுப்பாடுகள்

## விஸா பெற்றே செல்ல முடியும்

மலேசியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கையருக்கு பிரயாணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இனிமேல் பாஸ்போர்ட்கள் வைத்திருக்கும் இலங்கையர்கள் மலேசியாவுக்குள் நுழைய விஸா பெற்றாக வேண்டும் என்று மலேசிய அரசு அறிவித்துள்ளது.

கடந்த திங்கள் வரை மலேசியா செல்ல விஸா பெற வேண்டி இல்லாதிருந்தது.

இந்தக் கட்டுப்பாடு இலங்கை ராஜதந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விஸா கட்டணமாக 15மலேசிய டொலர்கள் (222 ரூபா) செலுத்தவேண்டும். இலங்கை ராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுக்கு இந்தக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விஸா பெறுவதற்கான புதிய நிபந்தனைகள் வருமாறு;

★ 60 நாட்களுக்குத் தங்குவதானால் நாள் ஒன்றுக்குக் குறைந்தது 30 மலேசிய டொலர் வீதம் 1,800 மலேசிய டொலர் வைத்திருக்க வேண்டும்.

★ மலேசியாவில் 6 நாள் தங்கப்போகிறவரும் இதே அளவு பணத்தைக் கொண்டு செல்லவேண்டும்.

★ தாயகம் திரும்புவதற்கான உறுதி செய்யப்பட்ட டிக்கட்டும் பயணியிடம் இருக்க வேண்டும்.

★ மலேசிய விமான நிலையத்தில் தரித்து நின்று வேறு விமானங்களில் ஏனைய நாடுகளுக்குச் செல்லும் பயணிகள் விஸா பெறவேண்டியதில்லை.

(ஒ-எ)


## கனடாவிற்கான உடனடி பிரயாண ஒழுங்கு


44 வயது ஆணும் 40 வயது பெண்ணும் 17,18 வயது இருபெண்களும் 16 வயது ஒரு ஆணும் கனடா செல்ல உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும். மேலும் 55, 48, 24, 19 வயது பெண்களிற்கும், 18 வயது ஒரு ஆணுக்கும் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும் விபரங்களிற்கு மட்டும் 25 ஆம் திகதிக்கு முன்பாக தினமும் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

Mr. A. Joseph
754, Hospital Road Jaffna

(2902)


22 - 12 - 89 இரவு அனுராதபுரத்தில் அகாலமரணமடைந்த திரு. ப. பத்மநாதனின்

# 90 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



## திரு. ப. பத்மநாதன்

தோற்றம்:- 12 - 6 - 1941  மறைவு:- 22 - 12 - 1989

[முன்னாள் தச்சன்கொல்லை சித்திவிநாயக ஆலய மணியகாரரும், கெருடாவில் இணக்க சபைத் தலைவரும், பொலிஸ் உத்தியோகத்தரும், தற்பொழுது வடபிராந்திய போக்குவரத்து சாலைப் பரிசோதகரும் (Depot Inspector point pedro)]

அன்புச் சுடராய் அறிவுக் கடலாய் எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொள்ளச் சென்றது எங்கே? உலகில் வைக்க இயலாமல் உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம்.

22 – 3 – 90 அன்று (வியாழன்) வீட்டில் கிருத்தியம் நடைபெற்று சந்நிதி கோவிலில் ஆற்றங்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உதவிசெய்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
''கடம்பவனம்'' கெருடாவில், தொண்டைமானாறு.
மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள்.

(2787)





ANTON

# அன்டன்

## உற்பத்திகளுக்கு கிழக்கு மாகாணத்தில் விநியோகஸ்தர்கள் தேவை

விரைவாக விற்பனையாகும் தரமான அன்டன் உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் சென். அந்தனி இன்டஸ்றீஸ் குறூப் நிறுவனத்தினருக்கு பின்வரும் பொருட்களின் விநியோகத்தை திறமையாக கிழக்கு மாகாணத்தின் முக்கிய பட்டினங்களில் கையாளக்கூடிய தகுதியான நிறுவனங்கள் தேவைப்படுகின்றன.

★ அன்டன் பி வி சி பைப்புகள், பிலிகளும் இணைப்புகளும்.

★ அன்டன் போல்ட்ஸ், நட்டுகள்

★ அன்டன் வீட்டுப்பாவனைக்குரிய பிளாஸ்டிக் பொருட்கள்

★ அக்கறையுள்ளவர்கள் தாங்கள் தற்போது செய்யும் தொழில், இடம் மற்றும் ஸ்டோர் வசதிகள் பற்றிய முழு விபரங்களுடன் 15-04-1990 க்கு முன்னர் விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

★ தெரிவு செய்யப்படும் விநியோகஸ்தர்கள் போதுமான வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்கும் படி கோரப்படுவார்கள்.

● கடித உறையின், இடது பக்க மேல் மூலையில் 'விநியோகஸ்தர்' என்று எழுதி பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்!

சந்தைப்படுத்தல் முகாமையாளர்,
சென். அந்தனி இன்டஸ்றீஸ் குறூப்
512, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு - 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நிகழ்ச்சிகள்

20- 03- 1990

5.00 நாதாஞ்சலி
5.05 தோத்திரமாலை
5.30 பாமாலை
5.45 சைவ நற்சிந்தனை
5.50 இஸ்லாமிய நற்சிந்தனை
5.55 பக்திப் பாடல்
6.00 வர்த்தக சேவை
6.30 செய்திகள்
6.40 செய்தித்தாள் கண்ணோட்டம்
7.00 வர்த்தக சேவை
7.30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7.45 மாகாணச் செய்திகள்
7.50 வர்த்தக சேவை
8.00 நாத வினோதம்
8.15 மெல்லிசைப் பாடல்கள்
8.30 மாதர் மஜ்லிஸ்
9.00 வர்த்தக சேவை
10.00 இசையமுதம்
10.30 பாட்டு
11.00 வீணைக் கச்சேரி
12.00 வர்த்தக சேவை
12.45 செய்திகள்
1.00 வர்த்தக சேவை
6.00 செய்திகள்
6.10 அறிவிப்புகள்
6.15 சைவ நெறி
6.30 மெல்லிசைப் பாடல்கள்
6.45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி
7.00 இளைஞர் மன்றம்
7.30 மெல்லிசைப் பாடல்கள்
7.50 உலகச் செய்திகள்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9.00 செய்திகள்
9.20 பக்திப் பாடல்கள்
9.30 உரைச் சித்திரம்
10.00 தாள வாத்தியக் கச்சேரி
10.30 மெல்லிசைப் பாடல்கள்
10.45 பஜன்
11.00 ஒலிபரப்பு முடிவு.

# இந்தியப்படையின் தியாகத்துக்கு நான் நன்றி கூறுகின்றேன்

## பிரியாவிடை வைபவத்தில் ஜே.ஆர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்20

வடக்கு- கிழக்கில் இந்திய அமைதிப்படையினர் செய்த சேவைகளையும், தியாகத்தையும் மறக்க முடியாது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் பிரியாவிடை விருந்துபசாரம் அளித்தது.

அப்போது பேசிய திரு. ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:

இலங்கையில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது இந்தியப்படை வீரர்களில் 1,500 வீரர் உயிரிழந்தனர். கோடிக்கணக்கான ரூபா பணத்தை இந்தியா செலவு செய்திருக்கிறது. இலங்கை இதனை மறக்கமுடியாது.

இலங்கை நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க அமைதிப்படை ஆற்றிய பங்கை தற்போதைய இலங்கை ஜனாதிபதியும் பாராட்டியிருக்கிறார்.

இப்படி திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

அமைதிப்படைத் தளபதி கல்கத் பேசுகையில்: "இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாக்க இந்தியப்படையினர் ஆற்றிய பங்கை வலியுறுத்தினார்.

"இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் முன்வராத எந்தக்கட்சியுடனும் இந்திய அமைதிப்படை இணங்கிப்போகவில்லை.

"இலங்கையின் நண்பராக வந்த இந்திய அமைதிப்படை இப்போது இலங்கையின் மிக நெருங்கிய நண்பராக தாயகம் திரும்புகிறது.

"இலங்கையின் 'நாளைய' சுபீட்சத்துக்கு ஆக இந்தியா தனது 'இன்றைய நலன்' பணியைச் செய்துள்ளது. இப்படி லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் தெரிவித்தார்.

இந்தியத்தூதர் திரு. மெஹ்ரோத்ரா பேசுகையில் சொன்னதாவது:

இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியப்படை அழைக்கப்பட்டது குறித்து இந்தியா பெருமைப்படுகிறது.

ஒரு நாட்டின் ஒற்றுமை, இறைமையைப்பாதுகாப்பதற்காக இன்னொரு நாடு இரத்தம் சிந்தியது ஓர் அரிதான உதாரணமாகும். உன்னத இலட்சியங்களுக்காக இந்தியா இரத்தம் சிந்தியது.

இப்படி அவர் சொன்னார்.

### நீண்டகால இடைவெளியின் பின்

## தலைமன்னார், மட்டக்களப்பு திருமலைக்கு இரவு ரயில் சேவை

கொழும்பு, மர்ச் 20

நீண்டகால இடைவெளி பின் பின்னர் தலைமன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு இரவுநேர ரயில் சேவைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்படவிருந்தன.

**கொழும்பு, மட்டக்களப்பு திருகோணமலை**

மட்டககளப்பு - திருமலைக்கான இணைப்பு இரவு தபால்ரயில் கொழும்பு,கோட்டையில் இருந்து இரவு 8மணிக்குப் புறப்படும்.

இந்த ரயில்மட்டக்களப்பை மறுநாள்காலை 6.06 மணிக்கு சென்றடையும், அதேவேளை கல்லோயாச் சந்தியில் இருந்து திருகோணமலைக்கான இணைப்புரயில் புறப்பட்டு அதிகாலை 5. 25 மணிக்கு திருமலையைச் சென்றடையும்.

மட்டக்களப்பில் இருந்து இரவு 7 மணிக்குப் புறப்படும் ரயிலும் திருகோணமலையில் இருந்து இரவு 8 மணிக்குப் புறப்படும் ரயிலும் கல்லோயாவில் இணைந்து அடுத்த நாள் காலை 6 மணிக்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்,

**தலைமன்னார் – கொழும்பு**

தலைமன்னாருக்கான நேரடி இரவு தபால்ரயில் கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 7. 25 க்கு புறப்பட்டு மறுநாள்காலை5 05க்கு தலைமன்னார் சென்றடையும்.

தலைமன்னாரில் இருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் தபால்ரயில் மறுநாள் காலை 6.25 க்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

**கொழும்பு - மட்டக்களப்பு பகல்சேவை**

மட்டக்களப்புக்கான காலைரயில் நேற்றுக் காலை 6.05 க்கு புறப்பட்டு பிற்பகல் 2. 38 க்கு மட்டக்களப்பை சென்றடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இன்றுமுதல் காலை சேவை காலை 6. 45 க்கு மட்டக்களப்பில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 3. 27 க்கு கொழும்புக் கோட்டையைச் சென்றடையும்.

**இடைவெளி**

மட்டக்களப்புக்கான இரவு ரயில் சேவை சுமார் இரண்டு வருட கால இடைவெளியின் பின்னரும், தலைமன்னாருக்கான சேவை 4 ஆண்டுகால இடைவெளியின் பின்னரும் ஆரம்பிக்கப்படுகின்றன.

(ஓ-எ)

## விண்ணப்பதிகதி மேலும் நீடிப்பு

கொழும்பு. மார்ச் 20

அரசாங்க பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை பயிலுநர் ஆசிரியர்களாகச் சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவு மார்ச் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவு திகதி முன்னர் மார்ச் 16 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(ஓ - எ)

## யாழ் - கொழும்பு . . ,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. 57 மணிக்கு யாழ் – ரயில் நிலையத்தை அடைந்து 7மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும்.

கொழும்பில் இருந்து வரும் யாழ்தேவி நேரத்தில் மாற்றம் இல்லை. அத்துடன் கொழும்பு- யாழ் தபால் ரயில் நேரத்திலும் மாற்றம் இல்லை.

இதேநேரம் கொழும்புக்கும், காங்கேசன்துறைக்கும் தினமும் இரண்டு சரக்கு ரயிலும் சேவையில் ஈடுபடும்

(ஓ- 3)

## நிரந்தரத் தீர்வு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி

அவர் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது:

இந்தியப்படை வெளியேறியவுடன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மக்கள் முன்னிலையில் தோன்றுவார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் எப்போது எங்கு தோன்றுவார் என்பதை இப்போதே அறிவிக்க முடியாது இருக்கிறது.

மேடைகளில் வந்து மாலை போட்டு வரவேற்கப்பட்டு, வாக்கு கேட்கும் கட்சித் தலைவர் அல்ல அவர்.

அவர் எமது இனத்தின் தேசியத் தலைவர். தேசிய விடுதலைப் போராட்டத் தலைவர். வரலாற்று மன்னர்.

இந்திய இராணுவத்துக்கு எதிராக யுத்தத்தை நடத்தி வெற்றிகண்ட வரலாற்றுச் சாதனை புரிந்தவர்.

அவரைப்பற்றிய சந்தேகங்கள் மக்களுக்கு எழக் கூடாது. அவரது பாதுகாப்பைப் பற்றித்தான் மக்கள் சிந்திக்க வேண்டும்.

அவரைப்பற்றிய சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக நாம் அவரை மக்கள் முன் அழைக்கப் போவதில்லை தகுந்த வரலாற்றுச் சூழ்நிலையில் அவர் மக்கள் முன் வருவார்.

இந்தியப்படை வரமுன்னர் ஸ்ரீலங்கா பொலீஸ் படையையும் அதன் சிவில் நிர்வாகத்தையும் நிர்மூலமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டவர்கள் நாம்.

இப்போது எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழ், முஸ்லிம் மக்களைக் கொண்ட மாகாணப்பொலீஸ் தேவை என வலியுறுத்துகிறோம்.

அந்த அமைப்பில் சேரும்படி தமிழ், முஸ்லிம் இளைஞர்களை இப்போது கோருகிறோம்.

இப்போது மாகாணசபையிலும், நாடாளுமன்றத்திலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் அல்லர்; நீதியான தேர்தல்கள் மூலம் தெரிவானவர்களும் அல்லர்.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கி மாகாண சபைக்கு புதிய தேர்தல் நடத்தினால் அத் தேர்தலில் எமது அமைப்பும் பங்குபற்றும்.

அப்படி நடைபெறும் ஒரு புதிய தேர்தலுக்கு முகம் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாரில்லை. அதற்கு அஞ்சுகிறது.

அப்படி ஒரு தேர்தல் நடந்தால் தற்போதைய மாகாண சபையில் உள்ளது போன்ற பிரதிநிதித்துவம் தங்களுக்குக் கிடைக்காது என்று அவர்கள் பயப்படுகிறார்கள். அதனால் தான் ஆறாவது திருத்தம் நீக்கப்படுவதை அவர்கள் எதிர்க்கிறார்கள் — என்றார். (உ)

# இந்தியப்படை வெளியேறியதும் ஒப்பந்தமும் காலாவதியாகிவிடும்!

## இலங்கை அரசு தெரிவித்ததா?

கொழும்பு, மார்ச் 20

இந்திய அமைதிப்படை வெளியேற்றத்துடன் மாகாணசபை முறையைக் கொண்டு வந்த இந்திய -இலங்கை, ஒப்பந்தமும் காலாவதியாகிவிடும்என்பதை இலங்கை புதுடில்லி அரசுக்கு சூசகமாக தெரியப்படுத்தி இருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த நிலைப்பாட்டை இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக புதுடில்லிக்கு இன்னும் தெரிவிக்கவில்லை.

ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் செல்லுபடியானது என்றே புதுடில்லி அரசு கருதுகிறது.

அமைதி ஒப்பந்தம் சம்பந்தமான விஷயத்தில் இலங்கை கடும்போக்கை எடுக்குமா? என்பது தெரியவில்லை.

கடும்போக்கை இலங்கை கடைப்பிடிக்குமானால் கச்சதீவு பிரச்சினை, கடல்எல்லை இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் தொடர்பான விஷயங்களில் இந்தியா தனக்குரிய பொறுப்புக்களை ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்யுமா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

உத்தேச இந்திய-இலங்கை நட்புறவு உடன்படிக்கை சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் சாத்தியங்கள் தென்படவில்லை.

உத்தேச நட்புறவு உடன்படிக்கை பற்றிய யோசனையை இலங்கைதான் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வந்தது.

ஆனால் இந்திய அரசு தனது மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்த பின்னர் இலங்கை நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் இலங்கை தரப்பில் இப்போது காணப்படவில்லை.

இப்படி 'இந்து' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-எ)

## புலிகள்———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து எடுத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டனர். விமானப்படையினர் விடாப்பிடியாக மறுத்தனர்.

அதைஅடுத்து அவ்விஷயத்தில் புலிகள் தலையிட்டனர். கண்டிப்பாக அவ்வாகனங்களை அகற்றி எடுத்துச் செல்லுமாறு புலிகள் படையினரைக் கேட்டனர்.

இக்கட்டத்தில் இப்பகுதியில் பதற்றம் ஏற்படத் தொடங்கியது.

எனினும் மேலதிகாரிகளுடன் விடுதலைப்புலிகள் தொடர்பு கொண்டதைஅடுத்து வாகனங்கள் அவ்விடத்தில் இருந்து அன்று சென்றன நிலைமை சுமுகமடைந்தது. (ஓ 21)

# நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர் ஆசிரியர்கள் விவரம் வருமாறு.

**ஆரம்பக் கல்வி**

. கனகேஸ்வரி- நல்லூர், தி. தில்லை நாயகி- யாழ், சி.யோகராணி- கொக்குவில் கிழக்கு, சுபதி- இராசரத்தினம்- கொக்குவில் மேற்கு, நா. கலாராணி- யாழ்ப்பாணம், செ. புவனேஸ்வரி- கோப்பாய். ஐ. றூபா- யாழ், சி. கனிஷ்ரலாதேவி- கொக்குவில், ந. சந்திரிகா- கொக்குவில், ந ரேணுகா- கொக்குவில், க. நளினி- யாழ் எஸ். இரஞ்சினிதேவி- யாழ், ச. வதனி- யாழ், க. செந்தினி யாழ், பிரேமா இந்திரன்- கொக்குவில், ச. கோணேஸ்வரி- யாழ், இ. தயானந்தன், இணுவில், அ. சூரியவதனி- யாழ்.

**இந்துசமயம்**

யோ. நிரஞ்சனாதேவி - பிறவுண் வீதி.

**கிறிஸ்தவம் (றோ. க.)**

ஞா. சிஸ்டர் - யாழ், அ. மரிஸ்ரெலா யாழ்.

**கிறிஸ்தவம் (றோ. க. அல்லாதது)**

ம. இரஞ்சினி - யாழ்.

**சிங்களம்**

மா. செல்வஸ்தனி - யாழ், சி. தயாபரன் - யாழ்.

**தமிழ்**

செ. பிரதீபா - யாழ், சி. சிவகாந்தன் - யாழ், ச. சாரதாதேவி - யாழ், த. ஜெயந்திமலர் - யாழ். வே. வித்தியா- நல்லூர்.

**கணிதம்**

ச. பாலச்சந்திரன் - கொக்குவில், ம. ஜீவமனோகரி - கொக்குவில், த. குகானந்த பாமா - யாழ்.

**விஞ்ஞானம்**

வி. சுமலா-கல்வியங்காடு, செ. கண்ணதாசன்- கொக்குவில், நா. ஜனத –அரியாலை மேற்கு, தி தயானந்தம் நல்லூர் வடக்கு.

**ஆங்கிலம்**

க. சுமதி-யாழ், ம. யோகேஸ்வரி-யாழ், ச மேரி கலிஸ்ரா –அரியாலை, ச. மிருணாளினி-கொக்குவில், இ. சர்வேஸ்வரன் – கோண்டாவில், வ.சி நிர்மலாதேவி - வண் மேற்கு, அ. அருட்செல்வி- கந்தர்மடம், ந. ஆனந்தச் செல்வி-கொக்குவில், ச. கிருபாகரன்-யாழ், யூ. விஜிகலா கொக்குவில்.

**சுகாதாரமும்உடற்கல்வியும்**

ச. தயாளன் - யாழ், த. சிவகுமார்-யாழ், ஐ. சுபத்திராதேவி - யாழ்.

**சமூகக்கல்வி**

பொ. கங்கேஸ்வரி-கோண்டாவில், தி. நடேஸ்வரி- யாழ், சி. ரஞ்சிதமலர்- கோண்டாவில், மா. தெங்கேஸ்வரி- யாழ், த. சந்திரிகா - யாழ்.

**சித்திரம்**

பொ. சிவகௌரி - யாழ், இ. யோகானந்தராணி- ஆனைக்கோட்டை, க. ராசாத்தி - கொக்குவில் ந. பிரமிளா - யாழ். ந. மஞ்சுளா- யாழ்.

**சங்கீதம்**

இ. சந்திரசேகரன்-கொக்குவில், பா. கண்ணன்- யாழ், ... இ. ...மாராணி - யாழ்.

ம. ஞானசம்பந்தன்–கொக்குவில் ந. ஜமுனா- யாழ்.

**நடனம்**

ச. சோபனா - யாழ். செ. தாரணி - யாழ், க. தர்சினி – கொக்குவில், க. ராதாகிருஷ்ணன் –யாழ், எஸ். சிவாஜினி - வண்ணார்பண்ணை, சு. பிரேமராணி – யாழ், மா. மீனாம்பிகை - யாழ், சு அகல்யா - யாழ்.

**விவசாயம்**

திருமதி ப. பாலசுப்பிரமணியம - யாழ், ம. சுஜாதா- கந்தர்மடம், ம. ஜீவரெத்தினம் - யாழ், குமுதினி – கோண்டாவில்.

**மனைப் பொருளியல்**

க. சுசீலாதேவி – யாழ், இ. பத்மலோசனி – திருநெல்வேலி, ப. கௌசல்யா – யாழ்.

**வர்த்தகம்**

த. தர்மராஜா – வண்ணார்பண்ணை, தயாநிதி திரு ஞானசம்பந்தன் – யாழ். த. கிரிஜா – கோண்டாவில்.

**தட்டச்சு, சுருக்கெழுத்து**

ச. சிவானந்தவல்லி-யாழ், கு. வாசுகி-யாழ்.

**மரவேலை**

இ. இரவீந்திரன்-யாழ்.

**உலோக வேலை**

அ. கி. அல்போன்ஸ்-யாழ், ச. உமாசுதன்-யாழ்.

**மோட்டோர் மெக்கானிசம்**

இ. பாலகிருஷ்ணன்-யாழ்.

**நெசவு**

நா. சிவநேசநாயகி – அரியாலை மேற்கு.

(க-3)


விரைவில் வெளிவருகிறது!

★ ஞானக்கதிர் ★

பங்குனித் திங்கள் இதழ்!

அம்பாள் அடியார்களுக்கு அருவிருந்து!!

ஞானக்கதிர்

அன்பு-அறநெறி- ஆன்மீகம்



★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாள் வழிபாட்டு முறைகள்
★ அம்பாளுக்குரிய விரத நாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இலைகள், இரத்தினங்கள் பற்றிய விளக்கம்.
★ அம்பாளின் ஈழத்துத் திருத்தலங்களான;

☐ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
☐ பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம்
☐ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
☐ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்

— ஆகியவற்றின் அற்புதங்களும், வரலாறும்

★ பகவான் சாயிபாபா வழங்கிய தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ..........!

பிரதி விலை ரூபா 5/- மட்டுமே

☐ அம்பாள் அடியார்களே!
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!!

● பிரதிகளை தவறாது பெற உதயன் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

[சி-3422]



## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. செ. தவலோகநாதன்

(சந்திரன்)

(வலி கிழக்கு, தென் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இருபாலைக் கிளை முகாமையாளர்)

மலர்வு: 19 – 03 – 1950

உதிர்வு: 31 – 03 – 1989

ஆறாத் துயர் கொண்டு
அழுது நிற்கும் வேளையிலே.
யாரெமக்குத் துணை என்று
எம்மை விட்டு மறைந்து சென்றீர்!
எல்லாம் வல்ல இறைவனை இப்போதும்எப்போதும்
இறைஞ்சுகின்றோம் நாங்கள்
இறைவனில் நினதான்மா
அமைதி பெறட்டும்.

மனைவி: கமலேஸ்வரி (ரதி)
மக்கள்: ராஜ்குமார், தர்மராஜ், கஸ்தூரி.

இருபாலை.

(சி-4068)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவுவாடகைக்குப்பெற

**பிறைற் ஹவுஸ்**

(சென்: ஜேம்ஸ் ஆலய அருகே)

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


# உதயன்

20 - 03 - 1990 செவ்வாய்க்கிழமை


அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம்இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

**பிறைற் ஹவுஸ்**

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ வடக்கு, கிழக்கில்

# ஸ்ரீலங்கா படையின் புதிய முகாம் எதுவும் திறக்கப்படமாட்டாது!

## இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, மார்ச் 20

"வடக்கு, கிழக்குப் பகுதியில் தற்போதுள்ள படைகளுக்கு மேலதிகமாக படைகளைக் குவிக்கவோ அல்லது புதிதாக முகாம்களை அமைப்பதற்கோ எந்த நடவடிக்கையும் இப்போதைக்கு எடுக்கப்படமாட்டாது."

இலங்கை இராணுவப் படையின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க இவ்வாறு உறுதியாகத் தெரிவித்தார்.

கொழும்பில் உதயன் செய்தியாளர்க்கு தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்படாத வகையில் நடந்து கொள்வது குறித்து இராணுவ உயரதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

புலிகளுடனான மோதல் ஏற்படாதவாறு நாம் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில்-இந்தியப் படை வெளியேறியுள்ள பகுதிகளுக்கு - நியாயமான அளவில் நகர்த்தப்பட்டிருக்கின்றன.

தற்போது வடபகுதியில் 2 பட்டாலியன்களும், திருகோணமலைப் பிராந்தியத்தில் 2 பட்டாலியன்களும், அம்பாறையில் 2 பட்டாலியன்களும், வவுனியா மன்னார் பகுதிகளில் 2 பட்டாலியன்களுமாக மொத்தம் எட்டு பட்டாலியன்கள் நிலைகொண்டிருக்கின்றன.

இதற்குமேலதிகமாக படைகள் அங்கு குவிக்கப்படமாட்டாது.

கச்சதீவு உட்பட எந்தத் தீவுப் பகுதியிலும் புதிதாக கடற்படை அல்லது இராணுவப் படை முகாம் எதுவும் அமைக்கப்படமாட்டாது.

தற்போதுள்ள சூழ்நிலையில் வடக்கு, கிழக்கில் பொலீஸாரோ அல்லது இராணுவத்தினரோ தமது கடமையில் ஈடுபட எந்தத் தடையுமில்லை. முகாம்களை விட்டு நாம் வெளியே சென்றுவர முடிகிறது. கடமையில் ஈடுபடவும் முடிகிறது—என்றார். (உ-2)

ஆஸ்பத்திரி வீதி வங்கியில்

## நிவாரணம் வழங்க கருமபீடம்; செயலக ஊழியர் கடமையில்

யாழ்ப்பாணம் மார்ச் 20

மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவை வழங்க விசேட கரும பீடம் ஒன்று ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது.

வங்கியில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதால் ஊழியர்களைக் கொண்டு இந்தக் கருமபீடம் செயல்படுகிறது.

திட்டமிடல் பகுதி அதிகாரி திரு. பாலகிருஷ்ணன் தலைமையில் 10 ஊழியர்கள் இந்தக் கருமபீடத்தில் பணியாற்றுகிறார்கள்.

வரணி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நேற்று கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இன்று வரணி வடக்குபகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

கிராமசேவை அதிகாரிகளுக்கு

## சுங்கத் தீர்வை இல்லாது மோட்டார் சைக்கிள்

கொழும்பு, மார்ச் 20

கிராம சேவை அதிகாரிகளுக்கு சுங்கத்தீர்வைஇல்லாமல் மோட்டார் சைக்கிள்களை வாங்கும் சலுகையை அரசு அளிக்க உள்ளது.

இதுசம்பந்தமானசிபார்சை உள்நாட்டு அலுவல்கள் துணை அமைச்சர் திர்மதி அமரா பியசீலி ரத்நாயக்கா அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்.

துணை அமைச்சரின் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் நாட்டில் உள்ள 14 700 கிராமசேவை அதிகாரிகளுக்கும் தங்கள் பாவனைக்கு சுங்கத் தீர்வை செலுத்தாமல் மோட்டார் சைக்கிள்களை வாங்க முடியும். (ஒ-எ)

**QUICK FOTO**

உங்கள் கலர்ப்படச் சுருள்களை விரைவாகவும் குறைந்த செலவிலும் Printing செய்து கொள்ளலாம்.

★ Master Color ★ Parakrama
★ Photo Chrome ★ Hayleys
★ Photo Kina

விரும்பிய Printing செய்து கொள்ளலாம்

**QUICK FOTO**

Clock Tower Road,
Jaffna.

கிளை: Main Road,
Tellippalai.

(C/4107)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விரைவில் ...

லிங்கம் தலைமையில் ஒரு குழு தலைமன்னாருக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டது. பின்னர் அக்குழு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது.

மன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தீவிர கவனஞ் செலுத்தி வருவதைத் தொடர்ந்தே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியவருகிறது. (ஒ-9)

## அன்னை பூபதி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகாத்மாகாந்தி விளங்குவது போல் சாத்வீகத்தின் தாயாக அன்னை பூபதி இன்று விளங்குகின்றார்'

தியாகம் புரிந்த அண்ணல் காந்தி உதித்த பூமியை ஆட்சி செய்த அந்த அரசு இங்கு வந்து தியாகத்திற்கு மாசு கற்பிக்க முயன்றது. ஆனால் அது முறியடிக்கப்பட்டது.

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள் வரலாறு படைத்து விட்டனர். அந்த வரலாறை படிக்கும் எமது எதிர்கால சந்ததிகள் அன்னை பூபதியின் தியாகத்தையும்தவறாது அறிந்து கொள்ளும்.

அன்னையின் நினைவை முன்னிட்டு தமிழீழத் தாயகத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் எமது அமைப்பின் 56 கிளைகள் மூலமும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்னையின் உயிர்த்தியாகம் மூலம் ஈழத்தமிழரின் பெருமை அவர்களின் விடுதலை வேட்கை அவர்களின் உறுதி ஆகியவை சர்வதேச ரீதியில் தெரியப்படுத்தி விட்டன.

அவரது நினைவாக அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாத காலத்தை எழுச்சி மாதமாக நாம் தெரிவிக்கிறோம் என்றார். (ஒ-21)

### திங்களன்று ஆளும் கட்சியின் விசேட கூட்டம்

கொழும்பு, மார்ச் 20

ஆளும் கட்சி உறுப்பினர்களின் விசேட கூட்டம் ஒன்று இம்மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் அமைச்சரவை மாற்றம் பற்றி அறிவிக்கப்படும் என்று அரசு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை இம்மாதம் 23 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யவும் அரசு உத்தேசித்திருக்கின்றது. (ஒ-எ)

வீதி ஒழுங்கு நடைமுறை:

## ஒத்துழைப்பு வழங்குமாறு புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாநகர சபைப் பகுதியில் இன்று முதல் அமுல் நடத்தப்படும் வீதி ஒழுங்கு நடைமுறைகளுக்கு வாகன சாரதிகளும் பாதசாரிகளும் முழு ஒத்துழைப்பைத் தந்து உதவ வேண்டும் என விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் வீதி ஒழுங்கு முறை இல்லாததால் வாகனங்கள் கண்டபடி வீதிகளில் ஓடுகின்றன. இதனால் வாகனங்கள் முட்டி மோதி விபத்துக்குள்ளாகின்றன. அது மட்டுமன்றி நகரில் வாகன நெரிசலும் ஏற்படுகின்றது.

விபத்துக்களினால் வீணான உயிரிழப்புகளும் அனர்த்தங்களும் நிகழ்கின்றன. அநாவசிய உயிரிழப்புகளை தவிர்க்க ஒழுங்கு முறையை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

வாகன நெரிசல் ஏற்படுவதால் பொன்னான நேரத்தை வீதியில் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. வீதிகளில் சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

இவை யாவும் உடனடியாக தவிர்க்கவே மாநகரசபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அதற்கு முழு ஒத்துழைப்பையும் நல்குவோமா. என்று புலிகள்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## மின்சாரக் கட்டணம் முதலாம்திகதி முதல் உயரும்

யாழ்ப்பாணம் மார்ச் 20

மின்சாரக் கட்டணம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் உயர்த்தப்பட இருக்கிறது.

இப்புதிய கட்டணத்தின்படி 50 யூனிட் பாவிப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாது. அதற்கு மேல் பாவிப்பவர்களுக்கு இரண்டு மடங்கில் இருந்து மூன்று மடங்குக்கு கட்டண உயர் இருக்கும்.

தற்சமயம் வீட்டுப்பாவனைக்கு ஒரு யூனிட்டுக்கு 55 சதமாகவுள்ள கட்டணம் இனி 80 சதமாக உயரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## வடக்கின் புனரமைப்பு ..

விரித்துவிட்டன."

இத்தகவலை வெளியிட்டவர் புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் திரு. கே. எி. லோகேஸ்வரன் ஆவர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புனரமைப்புக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மேலும் உதவிகளை வழங்குமா என்று கேட்ட கேள்விக்கே இவ்வாறு அவர் பதிலளித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த கால சம்பவங்களின் போது சேதமடைந்த பாடசாலைகள் மற்றும் கட்டடங்கள், தொலைத்தொடர்புச் சேவைகள், வீதிகள், நீர் விநியோகத் திட்டங்கள், மின் இணைப்புக்கள் போன்றவற்றைப் புனரமைக்க 21 நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் உதவிகளை வழங்கி இருந்தன.

கிடைத்த பணத்தில் 10 சதவீதமே செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் 30 சதவீதமான பணம் வாகனங்கள், வீதி ரோலர்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் வாங்குவதற்கு செலவிடப்பட்டன.

மீதியான 60 சதவீதமான நிதியை செலவிட்டு புனரமைப்பு வேலைகள் முடிந்தால்தான் மேலும் உதவிகள் வழங்க முடியும் என்று அந்த நிறுவனங்களின் அதிகாரிகள் எமக்குத் தெரிவிக்கிறார்கள்.

இந்த நிலையில் 1992 ஆம் ஆண்டு முடிவுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மூடப்படவிருக்கிறது. அதற்கு முன் தேவையான உதவிகளை நாம் பெற்றுக் கொடுக்க முடியும்.

இந்த அபிவிருத்தி வேலைகள் பற்றிய தேக்கம் குறித்து ஆராயவே இங்கு வந்தேன். வேலைகளில் உள்ள தடங்கல்களை நீக்கி விரைவாக வேலைகளைப் பூர்த்திசெய்து மேலும் வெளிநாட்டு உதவிகளைப் பெற சகலரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம் — இப்படி அவர் கூறினார்.

## அன்னையின் ..

காலன் பங்குபற்றினார்.

இருஅம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1988ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி முதல் உண்ணா நோன்பிருந்த அன்னை பூபதி ஏப்ரல் 19ஆம் திகதி உயிர்நீத்தார்.

அவரது உண்ணா நோன்பின் நினைவை ஒட்டி நேற்று ஆரம்பமான நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

அன்னையின் உண்ணா நோன்பை நினைவுபடுத்தும் விதத்தில் இக்காலகட்டத்தில் தினசரி இருவர் வீதம் சுழற்சி முறையில் இரண்டு பெண்மணிகள் மாமாங்கப் பிள்ளையார் கோயில் முன்றலில் உண்ணாவிரதம் இருப்பர்.

நேற்று அன்னையர் முன்னணித் தலைவி திருமதி கண்ணகை பிரான்ஸிஸ், திருமதி நடராஜா கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் உண்ணாவிரதமிருந்தனர்.

இதேவேளை அன்னையின் உருவப்படங்கள் ஈழத்தமிழர் பிரதேசம் எங்கும்ஆங்காங்கே வைக்கப்பட்டு, அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பல [illegible] நினைவுதினக் கூட்டங்கள் நடைபெற்றன. (உ-21)

ஷப்றா உட்பட

# ஏழு நிதி நிறுவனங்களே பதிவு செய்வதற்குத் தகுதி

கொழும்பு, மார்ச் 20

இந்த நாட்டில் உள்ள நிதி நிறுவனங்களில் ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனம் உட்பட ஏழு நிறுவனங்களே நிதி நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் தகுதியைப் பெற்றுள்ளன என்றுஅண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடனை அறவிடும் (விசேட விதிகள்) சட்டத்தின் மீதான விவாதம் அண்மையில் நடந்தபோது ஐக்கிய தேசியக்கட்சி எம்பியான திரு. ஹரிந்திரா துணுவில மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. துணுவில மேலும் சொன்னதாவது:

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிநிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிதி நிறுவனங்கள் சம்பந்தமாக மத்திய வங்கிக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் கீழ் ஒரு நிதி நிறுவனமாவது இன்னமும் பதிவு செய்துகொள்ளப்படவில்லை, எப்படியாயினும் பதிவு செய்துகொள்ள இவ்வாண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை அவற்றிற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனக்குக் கிடைத்துள்ள தகவலின் படி ஏழு நிதி நிறுவனங்கள் மட்டுமே இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் தகுதியைப் பெற்றுள்ளன.

அவையாவன:

1. மெர்க்கன்டைல் கிரெடிட் லிமிட்.
2. ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் கம்பெனி லிமிட்
3. சென்ரல் பினான்ஸ் கம்பெனி லிமிட்.
4. எல். பீ. பினான்ஸ் கம்பெனி லிமிட்.
5. ட்ரான்ஸ் லங்கா இன்வெஸ்ட்மன்ட் லிமிட்.
6. சிங்கபுத்ரா பினான்ஸ்.
7. பார்ட்லீற் பினான்ஷல் சேர்விஸ் லிமிட்.

இப்படி திரு. ஹரிந்ரா துணுவில தெரிவித்தார். (உ-எ)

## மாவிட்டபுரத்திலிருந்து நேற்று இந்தியப்படை வாபஸ்

காங்கேசன்துறை, மார்ச் 20

மாவிட்டபுரத்திலிருந்து நேற்று இந்தியப் படையினர் முற்றாக விலகிச் சென்றனர்.

1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அளவில் மாவிட்டபுரத்தில் இந்தியப் படையினர் முகாமிட்டனர்.

முகாம் விலக்கப்படுவதற்கு முன்பதாக மாவிட்டபுரம் கோவில் வீதியைச் சுற்றியுள்ள "சென்றி"கள் யாவும் உடைக்கப்பட்டன. பின்னர் நண்பகல் 12 மணியளவில் படையினர் கால் நடையாக காங்கேசன்துறையைச் சென்றடைந்தனர்.

படையினர் வெளியேறிய கையோடு விடுதலைப் புலிகள் புலிக்கொடிகளை பறக்க விட்டனர்.

மக்கள் வெடிகொளுத்தி பெரும் ஆரவாரம் செய்தனர்.

படையினர் விலகிச் சென்றதை விடுதலைப் புலிகள் வீடியோப்படம் எடுத்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் பஞ்சலிங்கம் பத்மநாதன்

தெல்லிப்பழை மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும், யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். பல்கலைக்கழக B. A. பட்டதாரியும், முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தருமான [S.S.O] செல்வன் பஞ்சலிங்கம் பத்மநாதன் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம், திருமதி சிந்தாமணி பஞ்சலிங்கம் அவர்களின் கனிஷ்ட புதல்வனும், பாலகிருஷ்ணர் (சீமெந்து கூட்டுத்தாபனம், கே. கே. எஸ்.), அருந்தவநாதன் (டொலர் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், பாலகிருஷ்ணர் பத்மராணி, அருந்தவநாதன் ஜானகி ஆகியோரின் மைத்துனரும், அருட்குமரன், மயூரதி, அகிலா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20-03-1990 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் மாவிட்டபுரம் தச்சங்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. பாலகிருஷ்ணர்

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

[12120]

### இராசையா இரவீந்திரன்
[செட்டிகுளம் - ரவி]

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், செட்டிகுளம் பிரபல வர்த்தகருமான இராசையா இரவீந்திரன் கனடாவில் 17-03-1990 சனிக்கிழமை காலமானார்.

இவர் சரவணை மேற்கு திரு. அ. இராசையா-திருமதி நல்லம்மா அவர்களின் அன்புப் புதல்வனும், யோகமலரின் அன்புக் கணவரும், பபி, ரூபி, சுஜன், பேபி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துராசா கொழும்பு, விவேகானந்தன் ஜேர்மனி, சிவானந்தன் (பவான்) பிரான்ஸ், இராமநாதன் (பாலன்) செட்டிகுளம், திருமதி ஜெயகௌரி குலசிங்கம், சுத்தானந்தன் (சுதா) சுவிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புங்குடுதீவு 7-ம் வட்டாரம் திரு. சு. கு. மயில்வாகனம் திருமதி கண்ணம்மா ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 19-03-1990 இல் கனடாவில் நடைபெற்றது.

தகவல்:
ந. குலசிங்கம்

சரவணை மேற்கு,
வேலணை.

[2926]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org